இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

மரியாவின் வாழ்த்தை எலிசபெத்து கேட்டபொழுது எலிசபெத்து வயிற்றிலிருந்த குழந்தை மகிழ்ச்சியால் துள்ளிற்று. எலிசபெத்து தூய ஆவியால் முற்றிலும் ஆட்கொள்ளப்பட்டார். அப்போது எலிசபெத்து உரத்த குரலில், “பெண்களுக்குள் நீர் ஆசி பெற்றவர்; உம் வயிற்றில் வளரும் குழந்தையும் ஆசி பெற்றதே! என் ஆண்டவரின் தாய் என்னிடம் வர நான் யார்? உம் வாழ்த்துரை என் காதில் விழுந்ததும் என் வயிற்றினுள்ளே குழந்தை பேருவகையால் துள்ளிற்று. (லூக்கா 1:39-45)

# அர்ப்பண வாழ்வு இன்றைய உலகிற்கு ‘நற்செய்தி’

**வத்திக்கான்:** நாம் ஆற்றுகின்ற பணி எதுவானாலும், அது நற்செய்திக்கு ஆற்றுகின்ற பணியே என்றும், குறிப்பாக துறவியர் அவர்களின் அர்ப்பண வாழ்வின் வழி என்றும் "நற்செய்திக்கு"ப் பணியாற்று கின்றனர் என்றும், இதன் வழியாக, அர்ப்பணிக்கப்பட்ட வாழ்வு இன்றைய உலகிற்கு ‘நற்செய்தி’யாக அமைந்துள்ளது என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கூறினார்.

துறவியர் பேராயம் நடத்திய ஆண்டு நிறையமர்வு கூட்டத்தில் கலந்துகொண்ட ஏறத்தாழ அறுபது பிரதிநிதிகளை டிசம்பர் 11, கடந்த சனிக்கிழமையன்று, வத்திக்கானின் கிளமெந்தினா அறையில் சந்தித்து உரையாற்றிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், துறவியர் ஆற்றுகின்ற இப்பணி எளிதானதல்ல என்று கூறி, அத்தகைய வாழ்வு வாழ்கின்ற மற்றும், வருங்காலத்தில் அவ்வாழ்வைத் தெரிவு செய்யும் அனைவருக்கும் தன் நன்றியைத் தெரிவித்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.

வாழ்வின் முக்கியத்துவத்தை உணர்ந்து, திருத்தந்தை புனித 2-ம் ஜோன் பவுல் அவர்கள், 1994-ம் ஆண்டில், துறவியர் பற்றிய உலக ஆயர்கள் மாமன்றத்தை நடத்தியதை நினைவுகூர்ந்த திருத்தந்தை, அக்காலக்கட்டத்தில், உலகின் பல்வேறு பகுதிகளில் துறவியர் எண்ணிக்கை குறைந்துவந்தது, இப்போதும் அது அதிகமாகக் குறைந்து வந்தாலும், அர்ப்பண வாழ்வு என்ற கடவுளின் அழகிய


துறவியர் பேராயம் நடத்திய கூட்டத்தில் கலந்துகொண்டவர்களுக்கு திருத்தந்தை உரை (Vatican Media)

கொடையில் வேரூன்றப்பட்ட நம்பிக்கை எல்லாவற்றிற்கும் மேலாக உயர்ந்திருந்தது என்றும், இந்த எண்ணத்தோடு, வருங்காலத்தை நம்பிக்கையோடு எதிர் நோக்கு மாறும் ஊக்கப்படுத்தினார்.

## தெளிந்துதேர்தல், உடன்பயணித்தல்

துறவியரின் பணிகளை, தெளிந்துதேர்தல், உடன் பயணித்தல் ஆகிய இரு சொற்களில் இரத்தின சுருக்கமாகச் சொல்ல முடியும் என்றும், தெளிந்துதேர்தலிலும், உடன் பயணித்தலிலும் சில கூறுகளை எப்போதும் உயிரூட்டம் பெறச்செய்ய வேண்டும் என்று திருத்தந்தை கூறினார்.

சிக்கலான சூழல்கள் நிலவும் சமயங்களில், நம்பிக்கை மற்றும் இறைவேண்டலில், பொறுமையுடன் தெளிந்து தேர்தலில் ஈடுபடுமாறும் கூறியத் திருத்தந்தை, அர்ப்பண வாழ்வு, திருஅவையில் பிறந்தது, அது இறைமக்களோடு ஒன்றித்து வாழ்வதில் திருஅவையில் மட்டுமே பலன் தரமுடியும் எனவும், தெளிந்துதேர்தல், மற்றும், உடன்பயணித்தலில் என்பது சில முக்கிநக் கூறுகளில் கவனம் செலுத்த வேண்டும் எனவும் கூறினார்.

புதிய நிறுவனங்கள், அர்ப்பண வாழ்வின் புதிய முறைகள் அல்லது புதிய சமூகங்களை உருவாக்கும்போது தெளிந்து தேர்தல் இருந்தாலும், மறைமாவட்ட ஆயர்களோடு ஒத்துழைப்பை வளர்த்துக் கொள்ளுமாறு திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கூறினார்.

**மேரி தெரேசா: வத்திக்கான் செய்திகள்**

# சபா, கெனிங்காவ் மறைமாவட்டத்தின் ஆயர் கொர்னிலியூ பியோங் அவர்களின் கிறிஸ்து பிறப்பு பெருவிழா வாழ்த்துச் செய்தி

அனைவருக்கும் கிறிஸ்து பிறப்பு பெருவிழா நல்வாழ்த்துக்கள் தெரிவிப்பதில் மகிழ் கிறேன். நாம் இன்னும் கோவிட்-19 தொற்றுநோயின் பிடியில் இருந்தாலும், கிறிஸ்து பிறப்பு பெருவிழா கொண்டாட் டத்தின் உண்மையான சாரத்தை நாம் நினைவில் வைத்திருக்கும் வரை, கடவுளின் அன்பின் வெளிப்பாட்டில் நம்பிக்கை இருக்கும் வரை, கிறிஸ்து பிறப்பு பெருவிழா கொண்டாட்டமும் நல்லுணரவும் உயிரோட்டமும் உள்ளதாக இருக்கும். அவருடைய அன்புக்கு நமது நன்றியின் வெளிப்பாடாக இக்கொண்டாட்டம் அமை கிறது (யோவான் 3:16)

கோவிட் -19 தொற்றுநோய்க்கு முந்தைய காலத்தில், கிறிஸ்தவர்களாகிய நாம் கிறிஸ்து மஸ் பெருவிழாவைக் கொண்டாடுவதில் உலக பாணியால் மிகவும் ஈர்க்கப்பட்டோம். எனவே நமது கிறிஸ்து பிறப்பு பெருவிழா கொண்டாட்டமானது அதிகமாக வெளிப் புறக் கொண்டாட்டமாகவும், உள்நாட்டில் அர்த்தமற்றதாகவும் இருந்தது என்பதை மறுப்பதற்கில்லை.

சகோதர சகோதரிகளே, இந்த திருவருகை காலத்தின் போது நாம் சிறிது நேரம் ஒதுக்கி, ஆழமாக சற்று சிந்தித்துப் பார்த்தால், மனிதர்களாகிய நம் மீதான கடவுளின் அன்பின் திட்டத்தை, பல நூற்றாண்டுகளாக கடவுள் எவ்வாறு பல்வேறு வழிகளில் திட்டமிட்டு, இறைவாக்கினர் வழியாக உணர்த்தினார் என்பதை நம்மால் நிச்சயமாக உணர முடியும். அவர் காலம் கனிந்த வேளையில் தம் மகன் இயேசு கிறிஸ்துவை (எபி. 1: 1-2; கலா 4: 4) நம் வாழ்க்கைப் பயணத்தின் பொருளை எடுத்துரைத்ததோடு, உண்மை யான நிலை வாழ்வை நமக்கு உறுதியளித் தார். ஆனாலும், நாம் திருமுழுக்கு யோவானிடமோ அல்லது இயேசு கிறிஸ்துவிலோ நம்பிக்கைக்கொள்ளவில்லை.

சகோதர சகோதரிகளே, கிறிஸ்து பிறப்பு பெருவிழா கொண்டாட்டம் மனிதகுலத் திற்கு நம்பிக்கையைக் கொண்டுவர வேண்டும். இதனால், நாம் கடவுளுக்கும் மனிதனுக்கும் மற்றும் கடவுளின் படைப்பு களுக்கும் இடையே நிலவும் அமைதி, மகிழ்ச்சி, நீதி மற்றும் நல்லிணக்கத்தை அனுபவிக்க முடியும். ஆனால் இன்று நாம் அனுபவிப்பது இதற்கு நேர்மாறானதாக உள்ளது.

மனிதர்களுக்கு கடவுள் நம்பிக்கை குறைந்து கொண்டே வருகிறது. மனிதர்கள் தங்கள் சக மனிதர்களில் இருக்கும் கடவுளை ஒப்புக் கொள்ளாததும், மனிதர்கள் ஒருவரை யொருவர் எப்படி கொடூரமாகவும் அநியாய மாகவும் ஒருவரையொருவர் நடத்துகிறார்



அணுகுமுறையைக் காணலாம். அவ்வாறே, கடவுளின் உடனிருப்பை அவருடைய படைப்பிலும் காணமுடியாதது மனுகுலத் தின் ஒரு குறைபாடு என்றே கூற வேண்டும்.

சகோதர சகோதரிகளே, இந்த கோவிட்-19 தொற்றுநோய் காலத்தில் நமது கிறிஸ்து பிறப்பு பெருவிழா கொண்டாட்டங்கள் மிகவும் எளிமையானதாகவும் அளவுக்கதிக மாக சாப்பிடவும் மது அருந்தவும் வேண்டாம் என்றும் அறிவுறுத்த விரும்பு கிறேன். மேலும், விருந்துபசரிப்புகளை மிகைப்படுத்தவும் வேண்டாம் என்றும் எப்போதும், நிர்ண யிக்கப்பட்ட பொது நடமாட்டக் கட்டுப்பாட்டு விதிமுறைகளைத் தவறாமல் கடைப்பிடிக்க வேண்டும் என்று வேண்டுகிறேன்.

இந்த கோவிட்-19 தொற்றுநோய் காலத்தில், நமக்கு மிகவும் தேவையான அளவு உணவு மற்றும் பானங்களை எடுத்துக் கொண்டு, இயேசுவே வழங்கிய ஆன்மீக உணவு மற்றும் பானத்தின் மீது கவனம் செலுத்துவோம்.

‘ஒன்றிப்பு, பங்கெடுப்பு மற்றும் மறைத் தூதுரை’ எனும் கோட்பாடுகளைக் கொண்ட ஒன்றித்தப்பயணம் எனும் உணர் வில் உங்கள் அனைவருக்கும் இனிய கிறிஸ்து பிறப்பு பெருவிழா மற்றும் புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மனுவுருவெடுத்த ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து உங்களை அனைவரையும் நிறை வாக ஆசீர்வதிப்பாராக.

+ஆயர் கொர்னிலியூ பியோங்,
கெனிங்காவ் மறைமாவட்டம், சபா

# ஏன் பல கத்தோலிக்கரல்லாத கிறிஸ்தவ சபையினர் நற்கருணையில் ஆண்வரின் உண்மை பிரசன்னத்தை ஏற்க மறுக்கிறார்கள்?

**ஏன் பல கத்தோலிக்கரல்லாத கிறிஸ்தவ சபையினர் நற்கருணையில் ஆண்டவரின் உண்மை பிரசன்னத்தை ஏற்க மறுக்கிறார்கள்?**

ஜெசிந்தா இம்மானுவேல்.

மத்தேயு 26, மாற்கு 14 மற்றும் லூக்கா 22 ஆகிய அதிகாரங்களில் “இதைப் பெற்று உண்ணுங்கள் இது எனது உடல்” என்றும், தொடர்ந்து “இதில் உள்ளதை அனைவரும் பருகுங்கள்; ஏனெனில், இது எனது உடன்படிக்கையின் இரத்தம்” என்றார். இந்த நற்செய்தி வாசகங்களில் இயேசு “இது எனது உடல்” என்பதையும், “இது எனது உடன்படிக்கையின் இரத்தம்" என்றதை அடையாளச் சொற்றொடர்களாகவோ (symbolic) அல்லது தமது உடலையும் இரத்தத்தையும் பிரதிநிதிப்பாதாகவோ (represent) கூறியதாக எவரும் உறுதியாகக் கூற இயலாது.

அன்றும் யூதர்கள் மத்தியில் இந்த கேள்வி பிறந்தது. “நாம் உண்பதற்கு இவர் தமது சதையை எப்படிக் கொடுக்க இயலும்”? (யோவான் 6:52) என்று கேள்வி எழுப்பினர்.

அப்போது, இயேசு “உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்; மானிடமகனுடைய சதையை உண்டு அவருடைய இரத்தத்தைக் குடித்தாலொழிய நீங்கள் வாழ்வு அடையமாட்டீர்கள். எனது சதையை உண்டு என் இரத்தத்தைக் குடிப்பவர் நிலைவாழ்வைக் கொண்டுள்ளார். நானும் அவரை இறுதி நாளில் உயிர்த்தெழச் செய்வேன். எனது சதை உண்மையான உணவு. எனது இரத்தம் உண்மையான பானம். எனது சதையை உண்டு எனது இரத்தத்தைக் குடிப்போர் என்னோடு இணைந்திருப்பர், நானும் அவர்களோடு இணைந்திருப்பேன் (யோவான் 6:53-56) என்று பதில் அளித்தார். இதில், “உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்”என்று இயேசு கூறியதை விளையாட்டாக அல்லது ஏனோதானோ போக்கில் காண இயலாது. இயேசு பொய்யர் அல்ல.

அன்று உடனிருந்த அவருடைய சீடர் பலர், "இதைப் பெற்று உண்ணுங்கள்; இது எனது உடல்” என்றும், தொடர்ந்து "இதில் உள்ளதை அனைவரும் பருகுங்கள்; ஏனெனில், இது எனது உடன்படிக்கையின் இரத்தம்” என்று இயேசு உரைத்ததைக் கேட்டு, “இதை ஏற்றுக் கொள்வது மிகக் கடினம்; இப்பேச்சை இன்னும் கேட்டுக்கொண்டிருக்க முடியுமா?” என்று பேசிக் கொண்டனர். (யோவான் 6:60) அதற்கும் இயேசு, "நீங்கள் நம்புவதற்கு இது தடையாய் இருக்கிறதா? அப்படியானால் மானிடமகன் தாம் முன்பு இருந்த இடத்திற்கு ஏறிச் செல்வதை நீங்கள் கண்டால் அது உங்களுக்கு எப்படி இருக்கும்? என்று மற்றொரு அதிர்ச்சியை முன் வைத்தார்.

இயேசு தமது சிலுவை மரணத்தை ஓர் அடையாளமாகக் கூறவில்லை. அது உண்மையாகவே நடந்தேறியது. அங்கே அவரது உடலையும் இரத்தத்தையும் பலியாகக் கொடுத்தார். அவ்வாறே, அதே உண்மை நிகழ்வை மறைபொருளாக திருப்பீடத்தில் அளித்துக் கொண்டிருக்கிறார். “இவ்வுணவை உண்போர் என்றும் வாழ்வர்” (யோவான் 6:58) என்று அவர் கூறியதிலிருந்து, அவரது திருவுடலும், திருஇரத்தமும் என்றுமுள நிலைவாழ்வுக்கான உணவு என்பது உண்மையாகிறது.

ஆகவே, இந்த அப்பமும் இரசமும் அவரது திருவுடலாக வும் திருஇரத்தமாகவும் தூய ஆவியாரால் திருப்பலியில் மாற்றம் காணுகிறது. எனது சதையை உணவாகக் கொடுக்கிறேன். அதை உலகு வாழ்வதற்காகவே கொடுக்கிறேன்” (யோவான் 6:51) என்று இயேசு நற்கருணையை இந்த உலகுக்காக, அதன் மீட்புக்காக அளித்துக்கொண்டிருக்கிறார். இதை நாமாக சொல்ல வில்லை. இவை இயேசுவின் உறுதியான வார்த்தைகள்.

1கொரி 11:23, 26-27)-ல் புனித பவுல் அடிகள், மேற்கண்ட இயேசுவின் உறுதிமொழியை “ஆண்டவரிட மிருந்து நான் எதைப் பெற்றுக்கொண்டேனோ அதையே உங்களிடம் ஒப்படைக்கிறேன்” “நீங்கள் இந்த அப்பத்தை உண்டு கிண்ணத்திலிருந்து பருகும் போதெல்லாம் ஆண்டவருடைய சாவை அவர் வரும்வரை அறிவிக் கிறீர்கள். ஆகவே, எவராவது தகுதியற்ற நிலையில் இந்த அப்பத்தை உண்டால் அல்லது ஆண்டவரின் கிண்ணத்தில் பருகினால், அவர் ஆண்டவரின் உடலுக்கும் இரத்தத்திற்கும் எதிராகக் குற்றம் புரிகிறார் என்று அறிவுறுத்தினார்.

ஆகவே, பல கத்தோலிக்கரல்லாத கிறிஸ்தவ சபையினர் நற்கருணையில் ஆண்டவரின் உண்மை பிரசன்னத்தை ஏற்க மறுக்கிறார்கள் என்றால் அது அவர்களின் அறியாமையையும், மறைநூலில் காணப்படும் வார்த்தையில் நம்பிக்கையின்மையையும் வெளிப்படுத்து கிறது. நிறைவாக, அப்ப இரசத்தில் இயேசுவின் பிரசன்னம் எப்போதும் உள்ளது என்பதும் நமது நம்பிக்கை.

*-ஆர்.கே.*

# அம்பாங், தாசேக் பெர்மாய் சிற்றாலயம் புதுப்பிக்கப்பட்டது!

**கோலாலம்பூர்:** இங்கு அம்பாங்கில், தாசேக் பெர்மாய் எனுமிடத்தில் அமைந்துள்ள விண்ணேற்பு ஆண்டவர் சிற்றாலயம் சமீபத்தில் புதுப்பிக்கப்பட்டது. ஏறக்குறைய RM30,000 செலவில் கட்டடத்திற்கு வெளிப்புறத்திலும் உட்புறத்திலும் சாயம் பூசுதல், புதிய கூரை அமைத்தல், நான்கு புறத்திலும் அதிக காலம் தாங்கக்கூடிய கதவுகளைப்



பொறுத்துதல் ஆகியவை இந்த புதுப்பித்தலில் அடங்கும்.

சென்ற டிசம்பர் 12-ஆம் நாள், இறுதிப்பணியாக சிற்சில பணிகள் முடிக்கப்பட்டு, 17-ஆம் நாளன்று, அருள்பணி ஜேம்ஸ் கேபிரியேல் அவர்களால் திருப்பலி கொண்டாடப் பட்டது.

1980-ஆம் ஆண்டில் கட்டப்பட்ட இச்சிற்றாலயம் கோலா லம்பூர் புடு சாலையில் அமைந்துள்ள புனித அந்தோணியார் பங்கின் நிர்வாகத்தின் கீழ் செயல்பட்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. இந்தப் புதுப்பித்தலைத் தொடர்ந்து, மீண்டும் இவ்வாட்டார கத்தோலிக்க மக்களுக்கு இச்சிற் றாலயம் திருப்பலிகளுக்கும் உருவாக்கப் பயிற்சிகளுக்கும் பயன்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது.







# அமைதியின் தூதுவராக, உதவிடும் பண்பாளராக வாழ்வோம்!

இன்று நாம் திருவருகைக் காலத்தின் 4-ம் ஞாயிறில் இணைந்துள்ளோம். இந்த வாரத்தின் கருப்பொருளாக நாம் அமை தியைத் தியானிக்கின்றோம். மனிதர்களில் எண்ணற்றோர் இந்த அமைதியைத் தான் தேடித் தேடி அலைகின்றார்கள். இந்த உலகம் காட்டும் அமைதியும் நம் விண்ணகத் தந்தை அருளும் அமைதியும் ஒரே தன்மையுடையதா என்றால் நிச்சயமாக இல்லையென்று அழுத்தமாகக் கூறுவோம்.

உலகம் தராத அன்பை தருவாயே இயேசு பாலா என்று ஒரு பாடல் உள்ளது. ஆம், இந்த உலகம் தரும் அமைதி மிகவும் தற்காலிகமானது, அது கண்முன் இருக்கும் நிதர்சனத்தை மறைத்துவிட்டு, பொய்யான ஒரு தோற்றத்தைத் தருகின்ற ஒன்று. அமைதி போன்ற மாயையை மட்டுமே அது தரமுடியும். அது நிலைத்திருக்காது.

இன்றைய முதல் வாசககத்தில் மீக்கா இறைவாக்கினர் கூறுகின்ற, முன்னறிவித்த மெசியா என்னும் நம் மீட்பரை முன்குறிக் கிறது. யூதாவின் குடும்பங்களிலே மிகவும் சிறியதான பெத்லகேமிலிருந்து தான் இஸ்ராயேலை ஆளப்போகின்றவர் தோன்று வார் என்று அறிவிக்கின்றார். அவர் தரப்போவது அச்சமில்லா வாழ்க்கை, அமைதியான வாழ்க்கை என்றும். கூறுகின் றார்.

ஏனென்றால் இஸ்ராயேல் மக்கள் அநீதியாய் நடந்துகொண்டிருந்த காலத்தில் அவர் களுக்கு எச்சரிக்கை விடுத்தபோதிலும், அவர்களுக்கு வரவிருக்கும் மெசியாவைப் பற்றியும் அறிவிக்கின்றார். ஏனென்றால் அமைதியைத் தருபவரும் அனைவரையும் ஆளும் வலிமையும் உடையவர் அவரே.

கிறிஸ்து பிறப்புப் பெருவிழாவை நெருங்கிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் நம் உள்ளம் எதை நோக்கிப் பரபரப்பாக இருக்கிறது. வீட்டை அலங்கரிப்பது. புத்தாடை எடுப்பது, சிற்றுண்டிகளைத் தயாரிப்பது, யாரையெல்லாம் விருந்துக்கு அழைப்பது என்று உடலும் எண்ணமும் அமைதியற்று அலைந்துகொண்டிருக்கும். ஆனால் ஒரு சில மணிநேரமாவது என் உள்ளம் என்னும் ஆலயத்தைத் தூய்மைப்படுத்தவும். ஒப்புரவு என்னும் அலங்காரத்தை செய்யவும், மேன்மையான உணவான நற்கருணையில் பங்கு பெறு வதும் என்னுடைய தயாரிப்பில் முன்னுரி மைப் பெறுகிறதா? என்று சற்று சிந்திப் போம்.

அமைதி தான் நமக்கு எல்லா செல்வத் தைவிடவும், மிகவும் இன்றியமையாதது. ஒவ்வொருவரும் ஒரு சிலவற்றில் அமைதி யைத் தேடுவர். செல்வம், புகழ், வசதியான வாழ்க்கை என்று ஒவ்வொரு வருக்கும் ஒரு அளவீடு இருக்கும். ஆனால் நம் உள்ளத்தில் இறைவன் தரும் அமைதி போன்று அமையாது.

மரியா எலிசபெத்தை சந்தித்த இந்த நிகழ்வு நமக்கு உணர்த்துகின்ற ஒரு முக்கிய செய்தி யாதெனில், ஒருவர் மற்றவரை அவரிட மிருக்கும் நல்ல பண்புகளுக்காக பாராட்ட வேண்டும் என்பதாகும் மரியாவோ எலிசபெத்தை சந்தித்ததும், அவர் முதிர்ந்த வயதில் கருத்தரித்ததற்காக அவரை வாழ்த்து கின்றார். எலிசபெத்தோ மரியாவை, அவர் ஆண்டவரின் தாயாக மாறியதற்காக வாழ்த் துகின்றார் – பாராட்டுகின்றார். இதனால் அந்த இடமே மகிழ்ச்சி பொங்கி வழிகின்றது.

ஆகவே, நாம் மரியாவைப் போன்று தேவையில் இருப்போருக்கு உதவிட விரைவோம், பிறரிடம் இருக்கும் நல்ல பண்புகளை, நல்லதைப் பாராட்டுவோம், இறைவனுக்கு உகந்த வழியில் நடப்போம்.

*-ஜோசப்பின் போஸ்கோ- சிரம்பான்*

**திருவருகைக் காலம் 4-ஆம் ஞாயிறு**

| | |
|---|---|
| 1-ம் வாசகம்: | மீக்கா 5: 2-5 |
| தி. பாடல்: | 80: 1-2b. 14-15. 17-18 |
| 2ம் வாசகம்: | எபி 10: 5-10 |
| நற்செய்தி: | லூக்கா 1: 39-45 |

**ஞாயிறு வாசகம் ஆண்டு 3**
**வாரநாள் முதல் வாசகம் –ஆண்டு 2**
**திருப்புகழ் மாலை—வாரம் 4**